வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 03.05.2025 சனிக்கிழமை இதழ் : 124 பக்கங்கள் : 12




# இலங்கை அரசியலில் தலையிடும் தேவை இந்தியாவுக்கு கிடையாது!

## உறுதிபடக் கூறுகிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, மே. 03

**இந்தியா என்பது உலகிலுள்ள மிகப்பெரிய நாடுகளில் நான்காவது இடத்திலுள்ள நாடாகும். எனவே அந்த நாடு வளர்ச்சியடைவதற்கு இலங்கை போன்ற மிகச் சிறிய நாடுகளின் அரசியலில் தலையிடவேண்டியேற்படும் என்று நான் எண்ணவில்லை. இந்தியாவுக்கு அதற்கான தேவைப்பாடும் இல்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,


எரிபொருள் விலைத் திருத்தங்கள் வழமையாக இடம்பெறுபவையாகும். எனவே அவற்றைப் பத்திரிகைகளில் பிரதான செய்தியாக பிரசுரித்து அரசாங்கம் பிரசாரத்தை மேற்கொள்வதால் பிரயோசனமில்லை.

மக்களால் இவற்றை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். நாட்டைக் கட்டியெழுப்புவதில் இவை தாக்கம் செலுத்தப் போவதில்லை.

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில் கட்சிகளுக்கு முக்கியத்துவமளிக்காது பொருத்தமானவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும்.

இந்தியா போன்ற பெரிய நாடுகளுடன் செய்து

11



# நல்லை ஆதீன முதல்வரின் திருவுடல் தீயுடன் சங்கம்

யாழ்ப்பாணம், மே. 03

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பரிபூரணமடைந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை அவரின் திருவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

கொழும்பில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நல்லை ஆதீன குரு முதல்வர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பரிபூரணமடைந்தார்.

சுவாமிகளின் திருவுடல் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்துக்கு கொண்டு வரப்பட்டு பூரணத்துவ சாந்தி நிகழ்வுகள்

11

# ராஜபக்ஷக்களின் சகோதரர்களாக மாறிவரும் தமிழ் அரசியல்வாதிகள்!

## அமைச்சர் சந்திரசேகர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 03

“வாக்கு வேட்டைக்காக வடக்கிலுள்ள சில தமிழ் அரசியல்வாதிகளும் ராஜபக்ஷக்களின் சகோதரர்களாக மாறி இனவாதத்தை கையிலெடுத்துள்ளனர்.” - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குற்றஞ் சாட்டினார்.



எனவே, வடக்கிலும், தெற்கிலும் மக்களை பிரித்தாளும் இனவாதத்தைத் தோற்கடித்து, முன்னோக்கிச் செல்ல தேசிய மக்கள் சக்திக்கு இம்முறையும் தமிழ் மக்கள் பேராதரவு வழங்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

வேலணை பகுதியில் நேற்று

11

# இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் கைப்பற்றிய தங்கம் பொலிஸாரிடம்!

கொழும்பு, மே. 03

இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளிடம் இருந்து இராணுவத்தால் மீட்கப்பட்ட பொதுமக்களுக்குச் சொந்தமான தங்கம் மற்றும் வெள்ளி என்பன பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவிடம் அதிகாரபூர்வமாக நேற்று ஒப்படைக்கப்பட்டன.

தங்கம் மற்றும் வெள்ளியின் இருப்பு நேற்று பத்தரமுல்லையில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் பதில் பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது.



இலங்கை இராணுவத்தின் கூற்றுப்படி, தங்கம் மற்றும் வெள்ளி ஆகியவை மதிப்பீட்டுக்காக

11

# தேசிய மக்கள் சக்தி தேர்தலில் பெரும் பின்னடைவை சந்திக்கும்

## கூறுகிறார் ரிஷாத் பதியுதீன்

வவுனியா, மே. 03

தேசிய மக்கள் சக்தி இந்த தேர்தலில் பாரிய பின்னடைவைச் சந்திக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா, சூடுவெந்தபுலவு கிராமத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கருத்து

11

# வடக்கு-கிழக்கில் 23 சதுர கிலோமீற்றர் நிலப் பரப்பில் இன்னும் மிதிவெடிகள்!

## தகவல் வெளியிட்டார் பிரதமர் ஹரிணி



கொழும்பு, மே. 03

வடக்கு மற்றும் கிழக்கில் சுமார் 23 சதுர கிலோமீற்றர் நிலம் இன்னும் கண்ணிவெடிகள் காரணமாகப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, கண்ணிவெடிகள் உள்ள பகுதிகளை பொதுமக்கள் விரைவில் பயன்படுத்தக்கூடியதாக மாற்றவேண்டும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள காலி முகத்திடல் ஹோட்டலில் நகர

11

# இந்தியா மீதான பகையுணர்வு நாட்டை ஆபத்தில் ஆழ்த்தும்!

## ஐக்கிய தேசிய கட்சி எச்சரிக்கை

கொழும்பு, மே. 03

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் எதிரொலித்த இந்திய எதிர்ப்பு உணர்வை கண்டிக்கின்றோம். பொருளாதார நெருக்கடியின்போது இலங்கை மக்களுக்கு ஆதரவாக நின்று நமது பொருளாதார

11

# தேர்தல் பிரசார நடவடிக்கை இன்று நள்ளிரவுடன் நிறைவு

கொழும்பு, மே. 03

வாக்கெடுப்புக்கு நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கு முன்னர் அதாவது இன்று நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் போட்டி யிடுகின்ற கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் தொடர்பான அனைத்து

11

# வடக்கில் 5,940 ஏக்கர் அபகரிப்பை தடுக்க இலவச சட்ட ஆலோசனை

யாழ்ப்பாணம், மே. 03

வடபகுதியில் 5940 ஏக்கர் காணிகள் சுபளீகரம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தும் முகமாக இலவச சட்ட ஆலோசனை வழங்கும் நிகழ்வு வெற்றிலைக்கேணியில் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த 28. 03. 2025 திகதி வெளியிடப்பட்ட


11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நல்லை ஆதீன முதல்வரின் இறுதி நிகழ்வின் போது...










படங்கள் : ஐ.சிவசாந்தன்



# இட்டு நிரப்பமுடியாத வெற்றிடம் ஏற்பட்டுள்ளது

## இந்து மாமன்றம் இரங்கல்

யாழ்ப்பாணம், மே 03

இறைவன் திருவுளப்படி சமாதி அடைந்த இரண்டாவது குருமகாசந்நிதானம் சுவாமிகள் இட்டு நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி சிவாயுச்சியம் எய்தியுள்ளார் என்று அகில இலங்கை இந்துமா மன்றம் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லை ஆதீன முதல்வரின் மறைவு தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் சிவசாயுச்சியம் எய்தியமை எமைப் பெருந் துயரத்தில் ஆழ்த்தியது.

இரண்டாவது குருமகாசந்நிதானம் சுவாமிகள் 1981இல் தமது இள வயதில் இப்பொறுப்பான பணியை ஏற்றுக் கடந்த 44 ஆண்டுகளாக மிருந்த அர்ப்பணிப்புடனும் நிதானத்துடனும் தமது பணிகளை முன்னெடுத்து ஆதீனத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வந்தார். யுத்தத்தால் சகல மக்களும் நிலைகுழம்பித் தடுமாறிக் கொண்டிருந்த தருணங்களில் எல்லாம் சுவாமிகள் ஆற்றிய பணிகளும் வழங்கிய ஆதரவுகளும் மறக்கவொண்ணாதவை. சர்வமதப் பெரியார்களுடன் சமரச உறவை ஏற்படுத்தி நலிவுற்றோருக்கு வேண்டியவற்றை நிறைவேற்றினார். தமது இளமைக்கால வாழ்வை ஆதீனத்துக்காகவே அர்ப்பணித்ததோடு ஓய்வு உறக்கமின்றி அரும்பணி ஆற்றியும் வந்தார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் இறுக்கமானதொரு பிணைப்பை கொண்டிருந்த சுவாமிகள் மாமன்றத்தால் நடத்தப்படும் சைவ மாநாடுகள் மற்றும் வரலாற்று நிகழ்வுகள் அனைத்திலும் வெகு ஆர்வத்துடன் கலந்து சிறப்பித்து ஆசி நல்கி வந்தார்.

இறைவன் திருவுளப்படி சமாதி அடைந்த இரண்டாவது குருமகாசந்நிதானம் சுவாமிகள் இட்டு நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி சிவாயுச்சியம் எய்தியுள்ளார்.

இக்கடினமான தருணத்தில் இந்து மாமன்றம் தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவிப்பதோடு பரிபூரணமடைந்த குருமகாசந்நிதானத்தின் ஆத்மா இறைவனடி சேரவும் பிரார்த்திக்கிறது - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
03.05.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

## செல்வாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது

ஜேர்மனிய அறிஞர் ஹெகலின் ஒரு கூற்றுண்டு - அதாவது, வரலாற்றிலிருந்து நாம் எதனை கற்றுக் கொண்டிருக்கின்றோம் என்றால் எதனையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதுதான். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியிருக்கும் ஒரு விடயத்தை உற்று நோக்கியபோது, ஹெகலின் கூற்றே நினைவுக்கு வந்தது.

இலங்கை தமிழ் அரசு கட்சி தவறான கொள்கையை கைவிட்டு, தந்தை செல்வநாயகத்தின் கொள்கையின் படி நேர்மையாக பயணிக்க முன்வந்தால் இணைந்து பயணிக்கத் தயாரென்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார். இன்றைய தமிழ் அரசுக் கட்சியின் கட்டமைப்பு மற்றும் அவர்களின் சுயநலச் சண்டைகளை ஒரு புறமாக வைத்துவிட்டு, செல்வநாயகம் காலத்து, தமிழ் அரசுக் கட்சியை நோக்குவோம் - உண்மையில் செல்வநாயகம் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை நிலைப்பாடு என்ன?

சமஷ்டியை ஓர் அரசியல் இலக்காகக் கொண்டுதான் செல்வநாயகம் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கினார். அதனால்தான் அதற்கு சமஷ்டிக் கட்சியென்று பெயரிட்டார். அது கட்சியின் கொள்கை. சமஷ்டி கொள்கை அப்போது மட்டுமல்ல இப்போதும் சிறந்த ஒன்றுதான். அது கிடைக்குமானால் அதனை யாரும் மறுதலிக்கப் போவதில்லை.

ஆனால் கேள்வி - அந்த சமஷ்டித் தீர்வை இலங்கையில் எவ்வாறு அடைவது? இந்தக் கேள்விக்கான பதில் செல்வாவிடமும் இருந்திருக்கவில்லை என்பதுதான் வரலாறு. செல்வாவிடம் அதற்கான பதில் இருந்திருந்தால் அந்த வழியால் அவர் நிச்சயம் பயணித்திருப்பார். ஆனால், அவருடைய காலத்தில் அவரால் அதனை அடைய முடியவில்லை. இந்த இடத்தில்தான் கொள்கையையும் அரசியல் சூழலையும் பிரித்துப் பார்க்க கற்றுக் கொள்வது அவசியமாகின்றது.

செல்வநாயகம் சமஷ்டியை அடிப்படையாக் கொண்டு கட்சியை ஸ்தாபித்திருந்தாலும், பண்டா - செல்வா உடன்பாட்டிற்கு செல்கின்ற போது, பல்வேறு விடயங்களில் சமரசத்தை செய்திருந்தார். இன்று, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, கோப்பிரேட்டிவ் பெடரலிசத்தின் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தினார் என்று, இன்றைய தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்வாதிகள் கூறுவது போன்றுதான், அன்றும், பண்டாரநாயக்கவிடம் நீங்கள் 1926இல் சமஷ்டிக்கு ஆதரவாக பேசினீர்களே என்றுதான் செல்வநாயகமும் குறிப்பிட்டிருந்தார். ஆனால், நான் இப்போது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டேன் மேலும் அதற்கான மக்களை ஆணை எனக்கு இல்லை, என்றே பண்டாரநாயக்க கூறினார்.

இன்றுவரையில் தென்னிலங்கை அரசியல் சூழலில் பண்டாரநாயக்க அன்று கூறியவாறுதான் இருக்கின்றது. இந்தப் பின்புலத்தில்தான் சமஷ்டியை உடும்புப்பிடியாக பிடிப்பதை விடுத்து, கீழிறங்கிச் செல்லும் வரலாற்று தீர்மானத்தை செல்வநாயகம் மேற்கொண்டார். கலாநிதி. ஏ.ஜே.வில்சன் எழுதிய, செல்வநாயகம் தொடர்பான சுயசரிதையில் - செல்வநாயகம் கேக் கிடைக்கவில்லை என்பதற்காக பாணை நிராகரிக்கின்ற தலைவர் இல்லை என்று பதிவு செய்திருக்கின்றார்.

வரலாற்றை உற்று நோக்கினால், செல்வநாயகம் பற்றிய, வில்சனின் கணிப்பு முற்றிலும் சரியானதாகவே இருந்திருக்கின்றது. செல்வநாயகம் கொள்கையை முன்வைத்தாலும், அதன் மீது, வரட்டுப் பிடிவாதம் கொண்ட, ஓர் அரசியல் தலைவராக ஒரு போதுமே இருந்திருக்கவில்லை. இந்த விடயத்தைத்தான் செல்வாவிடமிருந்து இன்றைய கொள்கைவாதிகள் கற்றுக்கொள்ள வேண்டும். கொள்கை வாதங்களை எவர் வேண்டுமானாலும் முன்வைக்கலாம். ஆனால், உச்சரிப்பதையெல்லாம் ஓர் இரவில் அடைந்துவிட முடியாது. இந்த இடத்தில்தான் தமிழ்த் தேசியம் பேசுவோர் அனைவரும் இன்றைய காலத்தில் மகாணசபை என்னும் விடயத்தில் ஒன்றுபட்டு, பயணிக்க வேண்டிய வரலாற்றுத் தேவையை காலம் உணர்த்துகின்றது.

# நல்லை ஆதீன முதல்வரின் மறைவு சைவர்களை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது

## இந்துக் குருமார் அமைப்பு

யாழ்ப்பாணம், மே 03

"எமது யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் பூரணமடைந்த செய்தி சைவ மக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது", என்று இந்துக் குருமார் அமைப்பு தெரிவித்துள்ளது.

நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமுதல்வர் இறைபதமடைந்தமை தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தியா மதுரை ஆதீன திருமடத்தின் தொடர்புடன் 1966ஆம் ஆண்டு ஆரம்பித்து சமயத்துக்காகவும் சமூகத்துக்காகவும் குரல் கொடுத்து பல்வேறு நற்பணிகள் ஆற்றிவந்துள்ள ஆதீனமாகும். முதலாவது ஆதீன கர்த்தராக மணி ஐயரவர்கள் விளங்கினார்கள்.

நல்லை ஆதீன இரண்டாவது குரு மகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் விளங்கினார்கள். அமைதியான சுபாவமுடையவராக அனைவரையும் அன்புடன் வரவேற்று அரவணைத்து வழிகாட்டிடும் ஒரு மகா புருஷராக விளங்கினார்கள்.

இச்சமயத்தில், சைவ மக்களாகிய நாமெல்லோரும் சுவாமிகள் திருவடி பணிந்தவர்களாக சிவசாயுச்சியத்துக்கு அன்பே உருவான பரம் பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்வோம் - என்றும் தெரிவித்துள்ளது. (ஐ)

# சைவம் காக்கும் தூண் சரிந்தது

## தருமை ஆதீன குருமுதல்வர் இரங்கல்

சென்னை, மே 03

சைவம் காக்கும் தூண் சரிந்தது தக்கவர்கள் அம் மடத்தினின்று சமயத்தை காக்க இறைவன் திருவருள் வேண்டும் என்று இந்தியாவின் தருமபுரம், தருமை ஆதீன 27ஆவது நட்சத்திர குருமணிகள் நட்சத்திர குரு மணிகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

நல்லை ஆதீன குருமுதல்வரின் மறைவையொட்டி அவர் விடுத்த இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், உலகெங்கும் சைவத்தை கொண்டுசென்ற இலங்கை யாழ்பாணம் நல்லை ஆதீனம் இறையடியில் சேர்ந்தது சைவ சமயத்துக்கு பேரிழப்பாகும்.

யாழ்ப்பாணத்தில் சைவத்தை வளர்க்க மதுரை ஆதீனம் 291ஆவது மகா சந்



நிதானத்தால் தோற்றுவிக்கப் பெற்று தம்முடைய கதா காலட்சேபத்தால் சமயத்தை புராணத்தை மாதகணக்கில் சொற்பொழிவாற்றிய சுவாமிநாத சுவாமிகளுக்குபின் 2ஆம் பட்டமாக தருமையாதீனத்தில் முறையாக காஷாயம் தீட்சைகள் பெற்று ஈழத் தமிழர் வாழும் தேசம் தோறும் பல மாநாடு நிகழ்வுகளில் பங்கேற்று சமயம் பரப்பியவர்.

நாம் மாவிட்டபுரம் கும்பாபிஷேகம் தரிசிக்க சென்றபோதுகூட சித்தாந்த மாநாட்டுக்கு அழைப்பு விட்டோம். அப்போது இங்கே தங்கி மருத்துவம் பார்க்கலாம் என்றோம். வருகிறேன் என்று கூறிமகிழ்ந்தவர் மாநாடு தொடக்கத்தின் முதல் நாள் பரிபூரணம் எய்தியமையால் தாங்கமுடியாத துயறுருகிறோம்.

சைவம் காக்கும் தூண் சரிந்தது தக்கவர்கள் அம்மடத்தினின்று சமயத்தை காக்க செந்தமிழ் சொக்கன் திருவருளை சிந்திக்கிறோம் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)


# மறைந்த நல்லை ஆதீன முதல்வருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் அஞ்சலி!

வடமராட்சி, மே 03

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் இறையடி சேர்ந்துள்ள நிலையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நேற்றைய தினம் அவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்தம் நடைபெறும் நிகழ்விலேயே இறைபதமடைந்த நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அவரின் சிவசாயுச்சியத்துக்கும் பிரார்த்தனை செய்யப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே - 03 சனிக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 20
நல்ல நேரம்:7.31 - 9.00
ராகு காலம்:9.00 - 10.30
திதி : சஷ்டி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித்தருவீர்கள். புது நட்பு மலரும். தடைகள் உடைபடும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். தலைசுற்றல் முழங்கால் வலி வந்து நீங்கும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். சிறப்பான நாள்.

**கன்னி**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சில நேரங்களில் நன்றி மறந்த சொந்த பந்தங்களை நினைத்து வருத்தப்படுவீர்கள்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்களை வாங்குவீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**மகரம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர் பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**கும்பம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு.

**மீனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். புது வேலை கிடைக்கும். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள்.

# உழைக்கும் மக்கள் கண்ட கனவுகள் நனவாகும் யுகம் உருவாகியுள்ளது!

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு




கொழும்பு, மே 02

உழைக்கும் மக்கள் உட்பட எமது நாட்டு மக்கள் கண்ட கனவுகள் நனவாகும் யுகம் உருவாகியுள்ளது. மக்களுக்கான மக்களாட்சியை முன்னெடுக்கும் அரசாங்கமே ஆட்சியில் உள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் காலி முகத்திடலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தி, ஒற்றுமையைக் கட்டியெழுப்பி, நாட்டை மேம்படுத்துவதே எமது இலக்கு. அந்த குறிக்கோளை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கையில் ஒரு சில கயவர்கள், ஒரு சில தீயவர்கள் தமது பழைய நோக்கங்களுக்காக மக்களைப் பிரிக்க முற்படுகின்றனர். இதற்கு மக்கள் இடமளிக்கமாட்டார்கள். அவர்களின் நோக்கமும் நிறைவேறாது.

76 வருடங்களாக இந்த நாட்டை நாசமாக்கிய கும்பல், மலையக மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படும் என தொடர்ச்சியாக கூறிவந்தன. தேர்தல் காலங்களில் மட்டும் அம்மக்கள் பகடைகளாக பயன்படுத்தப்பட்டனர்.

அம்மக்களின் பிரச்னைகள் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. நாம் ஆட்சிக்கு வந்த பிறகு தோட்டத் தொழிலாளர்கள் உட்பட மலையக மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றோம்"- என்றார். (எ)

## தமிழ் தேசிய பேரவையின் மே தின கூட்டம் நெல்லியடி மாலு சந்தியில் நடைபெற்றது




யாழ்ப்பாணம், மே 03

தமிழ்த் தேசிய பேரவையின் மே தின எழுச்சி கூட்டம் நேற்று முன்தினம் மாலை 06:30 மணியளவில் நெல்லியடி மாலு சந்தியில் அமைந்துள்ள மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னுடைய இரு பிள்ளைகளை மாவீரராக இனத்துக்கு வழங்கிய தாயாரால் பொதுச் சுடரேற்றப்பட்டது. தொடர்ந்து மே தின எழுச்சி கூட்டம் நடைபெற்றது.

இதில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ)

## யாழ்ப்பாணத்தில் மோ.சைக்கிள் பேரணி



யாழ்ப்பாணம், மே 03

வட மாகாண தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலிலிருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு மே தின மோட்டார் சைக்கிள் பேரணி ஆரம்பமானது.

ஆரியகுளம் சந்தி - ஸ்ரான்லி வீதியூடாக யாழ். நகரை அடைந்து, யாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகில் உள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நிறைவடைந்தது. (எ)

# மன்னாரில் நடைபெற்ற மே தின நிகழ்வுகள்

மன்னார், மே 03

மன்னார் மாவட்டத்தில் மீனவ கிராமங்களில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மே தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

குறிப்பாக, மன்னார் வங்காலை கிராம மக்கள் இம்முறை மே தினத்தை வெகு சிறப்பாக கொண்டாடினர்.

அந்த கிராம மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பொருளாதார பின்னடைவு மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறலால் ஏற்பட்ட பாதிப்புகள் உள்ளடங்கலாக பல்வேறு பிரச்னைகளால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் மே தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடியுள்ளனர்.

வங்காலை மீனவ சங்கம், மீனவ கூட்டுறவு சங்கம் மற்றும் வங்காலை விளையாட்டுக் கழகம் கூட்டாக இணைந்து மே தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்தன.



முதலில் வங்காலை மீன்பிடித்துறையில் அமைந்துள்ள சுருபத்தடியில் மே தின நிகழ்வு திருப்பலியுடன் ஆரம்பமானது.

இதன்போது கிராம மக்கள் மீன்பிடித் துறைமுகத்தில் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றினர்.

நீச்சல் போட்டி, பெரிய மற்றும் சிறிய படகுப் போட்டி, பெண்களுக்கான கயிறு இழுத்தல், சங்கீத கதிரை, சருக்கு மரம் ஏறல் உட்பட பல போட்டிகள் நடைபெற்றன.

இதேவேளை, மன்னார் பேசாலை மீனவ கிராமத்திலும் மே தின நிகழ்வுகள் நடைபெற்றன.

பேசாலை கடற்கரையில் அமைந்துள்ள சூசையப்பர் சிற்றாலயத்தில் மே தின சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் கடல் ஆசீர் வதிக்கப்பட்டு மே தின நிகழ்வுகள் நடைபெற்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல குற்றச்சாட்டுகளிலிருந்தும் மகிந்தவை அரசு விடுவிக்கும்!

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்



கொழும்பு, மே 03

**தற்போதைய அரசாங்கமே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கும் - என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாமல் ராஜபக்ஷ எம். பி.**

மொட்டுக் கட்சியின் தற்போதைய போக்கைக் கண்டு அரசாங்கம் பயந்தாலும் எனது கட்சி ஜனாதிபதியைக் கண்டு பயப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டம் நேற்று முன்தினம் அவர் தலைமையில் கொழும்பு - நுகேகொடையில் நடைபெற்றது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நாங்கள் ஏமாற்றுதலை சகித்துக்கொண்டோம் - இப்போது எழுந்து நிற்போம்" என்ற தொனிப்பொருளில் பொதுஜன பெரமுன மே தினக் கூட்டத்தை நடத்தியது. இதில், சி. பி. ரத்நாயக்க மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட முன்னாள் எம். பிக்கள் பலரும் பங்கேற்றனர். (ஐ)

# இன்புளுவென்ஸா பரவல் சிறுவரிடையே அதிகரிப்பு

## பாதுகாப்பில் கவனம் செலுத்த அறிவுறுத்து

கொழும்பு, மே 03

மழையுடனான வானிலையை அடுத்து சிறுவர்கள் மத்தியில் இன்புளுவென்ஸா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்துள்ளது என்று கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், இருமல், வாந்தி மற்றும் தடிமன் உள்ளிட்டவை இதற்கான அறிகுறிகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்புளுவென்ஸா ஏ மற்றும் இன்புளுவென்ஸா பி வைரஸ் பரவல் இந்த காலப்பகுதியில் அவதானிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் குளிர்ச்சியான நாடுகளில் காணப்படும் இன்புளுவென்ஸா ஏ வைரஸ் தொற்று அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளது. இந்த வைரஸ் தொற்று ஏனையோருக்கு பரவும் அபாயம் காணப்படுவதால் தொற்று இனங்காணப்பட்ட நபர் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும்.

நோய் அறிகுறி தென்பட்டால் அருகிலுள்ள மருத்துவரை உடனடியாக நாட வேண்டும். வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக கைகளை கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும் - என்று மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# வாகன இறக்குமதிக்கான சில கட்டுப்பாடுகள் நீக்கம்!

கொழும்பு, மே 03

வாகன இறக்குமதிமீதான சில கட்டுப்பாடுகளை நீக்கும் வகையில் நிதி அமைச்சு புதிய வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனூடாக, இறக்குமதி செய்யப்பட்டும் பல்வேறு காரணங்களால் விடுவிக்கப்படாமல் துறைமுகத்தில் தேங்கியுள்ள பல வகையான கார்களை விடுவிக்கப்படும்.

இது தொடர்பில் விளக்கமளித்த இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே,

"ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களாக ஹைபிரிட் ரொயோட்டா ராய்ஸ், ஹைபரிட் நிஸான் எக்ஸ்-ட்ரைல் வாகனங்களை எங்களால் விடுவிக்க முடியவில்லை. இப்போது புதிய வர்த்தமானியின் மூலமாக அந்த வாகனங்களை பெற்றுக்கொள்ள முடியும். இதேபோல், இந்த தொழில்நுட்பத்தின் கீழ் வரும் ஏனைய வாகனங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்."

இதேவேளை, பதிவு செய்யப்படாத புதிய மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் நீக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இறக்குமதி அனுமதிகளை பெற்று புதிய மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பல்கலைக்கழக அனுமதிக்கான கையேடு நாடெங்கிலும் இன்று முதல் விநியோகம்!

கொழும்பு, மே 03

அண்மையில் வெளியான க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 2024/2025 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக மாணவர் அனுமதிக்கான வழிகாட்டல் கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இந்தக் கையேடுகள் நேற்றைய தினமே நாடெங்கிலுமுள்ள பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் இன்று சனிக்கிழமை முதல் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை முடிவுகளின்படி பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமைபெற்ற மாணவர்களில் அரச பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07 எனும் முகவரியில் அமைந்துள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலகத்தில் அல்லது நாடெங்கிலுமுள்ள பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களிடம் கையேட்டு கட்டணமாக ரூபாய் ஆயிரம் செலுத்தி நேரடியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

தபால் மூலம் அனுமதி கையேட்டை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் இலங்கை வங்கி, ரொறிங்டன் கிளையின் 0002323287 என்ற கணக்கிலக்கத்துக்கோ அல்லது மக்கள் வங்கி, நகர மண்டப கிளையின் 167-1-001-4-3169407 என்ற கணக்கிலக்கத்துக்கோ விண்ணப்பக் கட்டணமாக ரூபாய் ஆயிரத்தை வைப்பிலிட்ட சிட்டையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட வேண்டுகைக் கடிதத்துடன், சுயமுகவரியிடப்பட்ட தபாலுறையுடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களைப் பெறுக் கொள்ள விரும்புபவர்கள் 011-2695301, 011-2695302 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஐ)

# தேர்தல் சட்டத்தை மீறிய 38 வேட்பாளர்கள் கைது!

கொழும்பு, மே 03

தேர்தல்கள் சட்டங்களை மீறியமை தொடர்பில் 38 வேட்பாளர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், எதிர்வரும் 6ஆம் திகதி உள்ளூராட்சி சபைகள் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தல் தொடர்பில் நேற்று காலை வரை 489 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 388 முறைப்பாடுகளும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 101 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்நிலையில், தேர்தல் சட்டங்களை மீறியமை, தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 38 வேட்பாளர்களும் 168 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக சட்டவிரோதமாக பயன்படுத்தப்பட்ட 36 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ஐ)

# பங்குச்சந்தை செவ்வாயன்று மூடப்படும்!

கொழும்பு, மே 03

கொழும்பு பங்குச் சந்தை எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம், உள்ளூராட்சி சபைகள் தேர்தல் நடைபெறுவதைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கொழும்பு பங்குச் சந்தையின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி பேசவிருந்த மேடையை படம்பிடித்த தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, மே 03

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்ட மேடையை படம் பிடித்தார் என்று கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச உழைப்பாளர் தினமான நேற்று முன்தினம் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி கொழும்பு - காலிமுகத்திடலில் கூட்டத்தை நடத்தியது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பங்கேற்று உரையாற்றினார்.

கூட்டம் ஆரம்பிக்க முன்னர் பதுளையை சேர்ந்த - கொழும்பில் பணியாற்றும் தமிழ் இளைஞர் ஒருவர் அந்த மேடையை படம் பிடித்தார். இதனை அவதானித்த பொலிஸார் அந்த இளைஞரை கைது செய்தனர்.

ஜனாதிபதி பங்கேற்கவிருந்த மே தினக் கூட்ட மேடை மிகவும் ஆடம்பரமாக இருந்ததால் தான் படம் பிடித்தார் என்று பொலிஸாரிடம் இளைஞர் கூறினார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# மலையக மக்களுக்கு இன்னமும் அங்கீகாரம் கிடைக்கவில்லை!

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

கொழும்பு, மே 03

ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் மலையகத்துக்கான அங்கீகாரம் உரிய முறையில் இன்னமும் கிடைக்கவில்லை - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவையில் நேற்று முன்தினம் நடந்த மே தினக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், பெருந்தோட்ட மக்களுக்கு மீண்டும் அடையாள பிரச்னை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# ஆற்றில் நீராடிய இருவர் மாயம்!

சிலாபம், மே 03

ஆற்றில் நீராடச் சென்றவர்களில் இருவர் காணாமல் போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் - சிலாபம் தெதுறு ஆற்றில் நேற்றுமுன்தினம் மாலை நீராடச் சென்ற ஐந்து பேரில் இருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனவர்கள் கண்டி மாவட்டத்தின் கட்டுகஸ்தோட்டை, கலகெதர பகுதிகளைச் சேர்ந்த 20, 22 வயதுடைய இளைஞர்களாவர்.

அந்தப் பிரதேசவாசிகள் பொலிஸார் இணைந்து காணாமல் போனவர்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். எனினும், நேற்று மதியம் வரை இவர்கள் தொடர்பில் எந்தத் தகவலும் வெளியாகவில்லை. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உயிருக்கு அச்சுறுத்தல் பொலிஸ் பாதுகாப்பு தேவை!

## தென்னக்கோன் எழுத்துமூலம் கோரிக்கை

கொழும்பு, மே 03

**தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால், பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று தேசபந்து தென்னக்கோன் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இந்தக் கோரிக்கையை அவர் எழுத்து மூலமாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவிடம் வழங்கியுள்ளார் என்று தெரிய வருகிறது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு பதவி சார் கடமைகளை மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பாதாள உலகக் குழு தலைவர் கஞ்சிபான இம்ரானிடமிருந்து அவருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறான சூழலில் தனது பாதுகாப்பு முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது என்றும், தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால், தகுந்த பாதுகாப்பு வழங்குமாறும் தேசபந்து தென்னக்கோன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவிடம் கேட்டபோது,

தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாக இருந்தபோது அவருக்கு பாதுகாப்பு வழங்கிய அதிகாரிகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும், இது தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்டால், அது குறித்து பரிசீலிக்கப்படும்.

தேசபந்து தென்னக்கோனின் உயிருக்கு ஏதேனும் அச்சுறுத்தல் உள்ளதா என்பதைத் தீர்மானிக்க பொலிஸாரால் பாதுகாப்பு மதிப்பாய்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படும். இதைத் தொடர்ந்து அவருக்கு பாதுகாப்பு அளிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# இரு பேருந்துகள் விபத்து; இருவர் பலி; 40 பேர் காயம்!

கொழும்பு, மே 03

இரு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இருவர் உயிரிழந்தனர். 40 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

பொலநறுவை - மின்னேரியாவில் ஹபரணை - பொலநறுவை பிரதான வீதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து பொலநறுவைக்கும் பொலநறுவையிலிருந்து கொழும்புக்கும் பயணித்த பேருந்துகளே நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் பொலநறுவை பொது மருத்துவமனை, ஹிங்குராங்கொடை ஆதார மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஏற்றுமதி வருமானம் மார்ச்சில் அதிகரிப்பு

கொழும்பு, மே 03

கடந்த மார்ச் மாதத்தில் ஏற்றுமதி வருமானம் அதிகரித்திருந்ததாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது வெளியிட்ட அறிக்கையில்,

மார்ச் மாதத்தில் ஏற்றுமதி வருமானம் 124.2 கோடி அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது. இது கடந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் 8.1 சதவீதம் அதிகரிப்பாகும்.

இதேவேளை, இந்த ஆண்டு மார்ச்சில் இறக்குமதி செலவு 163.7 கோடி அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது. இது கடந்த வருடத்தை விட 8.6 சதவீத அதிகரிப்பாகும். (ஐ)

# தொழிலாளரை ரணில் வழியில் அநுர குமாரவும் சுரண்டுகிறார்!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

நுவரெலியா, மே 02

சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எட்டிய இணக்கப்பாடுகளுக்கு அமைய ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியை சீர்குலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த கொள்கைக்கு பின்னால் சென்று தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டும் திட்டங்களை அவ்வாறே நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நுவரெலியா - தலவாக்கலையில் நேற்றுமுன்தினம் நடந்த மே தினக் கூட்டத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இந்த யுகம் தொழிலாளர்களின் உரிமைகள் ஒழிக்கப்படும் யுகமாகும். தொழில் புரியும் மக்களின் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியில் கொள்ளையடிக்கும் யுகமே தற்போது காணப்படுகிறது. கடந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்கமைய மேற்கொண்ட கடன் மறுசீரமைப்பினால் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியை சீர்குலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதியின் அந்த கொள்கைக்கு பின்னால் சென்று தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் தொழில் செய்யும் மக்களின் உழைப்பை சுரண்டும் திட்டங்களை அவ்வாறே நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார். உங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இன்றைய தினத்தில் மாத்திரமின்றி எதிர்காலத்திலும் நாம் பாடுபடுவோம் - என்றார். (ஐ)

# சுற்றிவளைப்பில் 370 பேர் கைது!

கொழும்பு, மே 03

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் போதைப்பொருட்களுடன் 370 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹெரோயினுடன் 149 பேரும் ஐஸ் போதைப் பொருளுடன் 115 பேரும் கஞ்சாவுடன் 105 பேரும் கஞ்சா செடிகளுடன் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து, 144 கிராம் 776 மில்லிகிராம் ஹெரோயின், 306 கிராம் 436 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், 418 கிராம் 854 மில்லிகிராம் கஞ்சா, 500 கஞ்சா செடிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வரும் 8, 9ஆம் திகதிகளில் கூடுகிறது பாராளுமன்றம்

## கட்சி தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, மே 03

எதிர்வரும் 8, 9ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்போது, சுங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பில் எதிர்வரும் 8ஆம் திகதி விவாதிக்கப்படும். இதேநேரம் எதிர்வரும் 9ஆம் திகதி தனிநபர் பிரேரணை சபையில் முன்வைக்கப்படவுள்ளது.

இதேவேளை, குற்றச்செயல்களின் மூலம் ஈட்டப்பட்ட சொத்துகளை பறிமுதல் செய்வதற்கான சட்டமூலம் எனப்படும் குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டமூலத்தில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன கையொப்பமிட்டு சான்றுரைப்படுத்தினார்.

இந்த சட்டமூலம் வாக்கெடுப்பின்றி, திருத்தங்கள் இன்றி கடந்த மாதம் 8ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 22 எம்.பிக்களின் சிகிச்சை தகவலை வழங்க மருத்துவர்களுக்கு உத்தரவு!

## கோட்டை நீதிவான் நீதிமன்றம் விடுத்தது

கொழும்பு, மே 03

ஜனாதிபதி நிதியத்தின் நிதியை முறைகேடாக பயன்படுத்தினர் என்று கூறப்படும் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் சிகிச்சை பெற்றமை தொடர்பான தகவல்களை வழங்குமாறு அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளின் பணிப்பாளர்களுக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நகர்த்தல் பத்திரம் ஊடாக குற்றப்புலனாய்வு திணைக்களம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய கோட்டை நீதிவான் நிலுப்லி லங்காபுர இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

2008 முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 10 கோடி ரூபாய்க்கும் அதிக நிதியை பெற்றுக்கொண்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் நிதி மற்றும் வர்த்தக குற்ற விசாரணை பிரிவால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனரா என்பது குறித்த தகவல்களைப் பெற குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரு சந்தர்ப்பங்களில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதியாக விரும்புவோர் சிந்தனையை மாற்றவேண்டும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, மே 03

எமது மக்கள் அலையை பார்த்து எதிர்வரும் ஒகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதமளவில் ஜனாதிபதியாக நினைப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. ஜனாதிபதியாக வேண்டும் என்ற சிந்தனையில் உள்ளவர்கள் அந்த சிந்தனையை திருத்தியமைக்க வேண்டும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் நடந்த தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், காலிமுகத்திடல் இம்முறை மே தின கூட்டத்தால் பெருமையடைந்துள்ளது. 2025ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்துடன் மே தின கூட்டத்தை நடத்துவோம் என்று கடந்த முறை மக்களுக்கு வாக்குறுதி அளித்தோம். அந்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளோம்.

ஏனைய அரசியல் கட்சிகளின் மே தின கூட்டத்துக்கும் எமது மே தின கூட்டத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன. பெரும் போராட்டத்துக்கு மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றினோம். போராட்டத்தைக் கொண்டாடும் வகையில் இம்முறை மே தினக் கூட்டம் அமைந்துள்ளது. எமது மக்கள் அலையை கண்டு எதிர்வரும் ஒகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதமளவில் ஜனாதிபதியாக நினைப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. ஜனாதிபதியாக வேண்டும் என்ற சிந்தனையில் உள்ளவர்கள் அந்த சிந்தனையை திருத்தியமைக்க வேண்டும்.

உழைக்கும் வர்க்கத்தினர் எமது வெற்றியின் பிரதான பங்காளர்கள் என்பதை ஒருபோதும் மறக்க போவதில்லை. மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு அமைவாகவே செயல்படுவோம். எதிர்கால குறித்து அரசாங்கத்திடம் பெரும் திட்டங்கள் உள்ளன. சிறந்த நாட்டையே நாங்கள் எதிர்கால தலைமுறையினரிடம் ஒப்படைப்போம் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 பெரும் ஊழல்கள் குறித்து விரைவில் குற்றப்பத்திரிகை!

## இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு

கொழும்பு, மே 03

**கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மிகப்பெரியளவிலான 15 ஊழல், மோசடி சம்பவங்கள் தொடர்பில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுமென இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

விசாரணை செய்யப்படாத முறைப்பாடுகளில் காணப்பட்ட ஆவணங்களை ஆராய்ந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் மிகவும் சிக்கலான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலத்தில் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு கிடைத்த 300 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த அமைச்சர்கள் மற்றும் அவர்களின் அரசியல் நண்பர்கள் பலர் இந்த ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புபட்டுள்ளனர் என்று இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அநுர செய்த அபிவிருத்தி என்னவென்று கூறமுடியுமா?

## பொதுஜன பெரமுன கேள்வி

கொழும்பு, மே 03

இந்த நாட்டில் வங்கிகளை யார் கொள்ளையடித்தது, யார் மக்களை படுகொலை செய்தது. ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, அவரை சூழ்ந்துள்ளவர்கள் இந்த நாட்டுக்கு என்ன அபிவிருத்தி செய்தார்கள். அவ்வாறு ஏதேனும், செய்திருந்தால் எவராலும் குறிப்பிட முடியுமா என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன பொதுச்செயலாளர் சாகர காரியவசம் கேள்வியெழுப்பினார்.

கொழும்பு - நுகேகொடையில் நடந்த மே தினக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 30 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்தபோது அனைத்து அபிவிருத்தி திட்டங்களுக்கும் வெளிநாட்டு முதலீடுகளுக்கும் எதிராக மக்கள் விடுதலை முன்னணிதான் எதிர்ப்பு தெரிவித்து அனைத்தையும் தாமதப்படுத்தியது.

இந்த நாட்டில் வங்கிகளை யார் கொள்ளையடித்தது, யார் மக்களை படுகொலை செய்தது. ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, அவரை சூழ்ந்துள்ளவர்கள் இந்த நாட்டுக்கு என்ன அபிவிருத்தி செய்தார்கள். அவ்வாறு ஏதேனும் செய்திருந்தால் எவராலும் குறிப்பிட முடியுமா?

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா மற்றும் சீனாவுடன் ஒன்றிணைந்து அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டபோது இந்திய ஆக்கிரமிப்பு, சீன கொலனி என்று குற்றச்சாட்டுகளை முன்வைத்த மக்கள் விடுதலை முன்னணி இன்று இந்தியா மற்றும் சீனாவுக்கு சென்று வெட்கமில்லாமல் ஒப்பந்தங்களை கைச்சாத்திடுகிறது.

தேர்தல் வெற்றிக்காக மக்கள் விடுதலை முன்னணி மக்களிடம் குறிப்பிட்ட பொய் இன்று வெளிப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி என்றால் பொய் மற்றும் வெறுப்பு என்பதை மக்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளார்கள். 2029ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ வெற்றிப்பெறுவார். மக்கள் விடுதலை முன்னணியின் பொய்களுக்கு மக்கள் இனியொருபோதும் இடமளிக்க மாட்டார்கள் - என்றார். (ஐ)

# குழியிலிருந்து சடலம் மீட்பு!

கொழும்பு, மே 03


குழி ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி - பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ராஸ்ஸகல பிரதேசத்திலேயே இந்த சடலம் மீட்கப்பட்டது.

மரணத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அரியவகை உயிரினங்களுடன் கொழும்பில் மூவர் கைதாகினர்



கொழும்பு, மே 03

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட உயிரினங்களுடன் பெண் ஒருவர் உட்பட மூவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா - வெயாங்கொடை பிரதேசத்தை சேர்ந்த பெண் ஒருவரும் ஆண் கள் இருவருமே நேற்று முன்தி னம் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மூவரும் தாய்லாந்தின் பாங்கொக்கிலிருந்து நாடு திரும்பினர்.

அவர்களை சுங்க அதிகாரிகள் சோதனையிட்டபோது பயணப் பைகளிலிருந்து சில வகை உயிரினங்களை கைப்பற்றினர்.

சந்தேக நபர்களிடமிருந்து அரிய வகை ஆமைகள், நத்தைகள், மீன்கள், கடல் நத்தைகள், தவளைகள், கடல் ஆமைகள் உள்ளிட்ட பல உயிரிழனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# துப்பாக்கியுடன் சந்தேகநபர் கைது!

கொழும்பு, மே 03

உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் - ரஸ்நாயக்கபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் அதே இடத்தைச் சேர்ந்த 37 வயது நபராவார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 56 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களுடன் பெண் கைது

கொழும்பு, மே 03

நாட்டுக்கு சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 56 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி - மத்தேகொடையை சேர்ந்த 63 வயது பெண் ஒருவரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைதான பெண் டுபாயிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தார் என்றும் அவரை சோதனையிட்ட விமான நிலைய பொலிஸார் அவரிடமிருந்து தங்க நகைகள், 6 மடிக்கணினிகள், 11 கைபேசிகள் என்பவற்றை கைப்பற்றினர்.

சுங்கத்தை ஏமாற்றி இந்தப் பொருட்கள் கொண்டுவரப்பட்டன. கைதான பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# எரியூட்டப்பட்ட நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

கொழும்பு, மே 03

கூரிய ஆயுதத்தால் குத்திக் கொல்லப்பட்டு எரியூட்டப்பட்ட நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு - கல்கிசை - ஹூலுதாகொடை பகுதியிலேயே நேற்று முன்தினம் இந்த சடலம் மீட்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் இரத்மலானை - மகிந்தாராமையை சேர்ந்த 23 வயதுடைய கவிந்த கயாஷான் எனப்படும் டிகிரா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, குடு அஞ்சு என்ற போதைப்பொருள் வலையமைப்பை நடத்துபவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பல்கலை. மாணவன் மரணம் விசாரிக்க மூவர் குழு நியமனம்

கொழும்பு, மே 03

பகிடிவதை காரணமாக உயிரிழந்தார் என்று கூறப்படும் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவரின் மரணம் தொடர்பில் விசாரிப்பதற்காக மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சுனில் ஷாந்த தெரிவித்துள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் வருட மாணவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார்.

இந்த நிலையில், குறித்த மாணவர் உட்பட தொழில்நுட்ப விஞ்ஞான பீடத்தின் மாணவர்களுக்கு தற்போது இணையவழி ஊடாகவே கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அதற்கமைய அந்த மாணவருக்கு பல்கலைக்கழகத்துக்கு வரவேண்டிய தேவை இருக்கவில்லை என்றும் துணைவேந்தர் குறிப்பிட்டார்.

எனினும், குறித்த மாணவன் கடந்த 26ஆம் திகதி பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்தார். அத்துடன், 27ஆம் திகதி நடந்த புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்விலும் பங்கேற்றார். அவருக்கு தங்குமிட வசதி வழங்கப்படவில்லை. அவர் மூன்றாமாண்டு மாணவர்கள் தங்கியிருந்த விடுதியிலேயே தங்கியிருந்தார் என்று தகவல் கிடைத்துள்ளது.

பகிடிவதை குற்றவியல் குற்றம் என்பதால் அவ்வாறான விடயம் இடம்பெற்றுள்ளதாக உறுதிப்படுத்தப்படுமாயின் அதனுடன் தொடர்புபட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ரயில் ஓட்டோவை மோதியதில் ஒருவர் பலி; மற்றொருவர் காயம்!

கொழும்பு, மே 03

பாதுகாப்பற்ற கடவையை கடந்த முச்சக்கர வண்டியை ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

காலி - அஹங்கம பிரதேசத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்தவர் உயிரிழந்தார். சாரதி படுகாயமடைந்தார். படுகாயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூரில் மேதின நிகழ்வு




மூதூர், மே 03

திருகோணமலை, மூதூர் மல்லிகைத்தீவு கிராமத்தில் உலக தொழிலாளர் தின நிகழ்வு நேற்று முன்தினம் காலை நடைபெற்றது

இதன்போது, தொழிலாளர்களை கௌரவிக்கும் வகையில் மூதூர்-மல்லிகைத்தீவில் உள்ள உழவர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது.

மூதூர் -மல்லிகைத்தீவு கிராம மக்கள் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் பிரதேச தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ)

## திருகோணமலையில் கனமழை வெள்ளத்தில் மூழ்கிய வயல்கள்



திருகோணமலை, மே 03


திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம், கிண்ணியா பிரதேச செயலகப் பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் 30ஆம் திகதி புதன்கிழமை பெய்த கனமழையால் நீரில் மூழ்கின.

தம்பலகாமம் கோயிலடி பகுதியை அண்டிய வயல் நிலங்களும் கிண்ணியா சூரங்கல் பகுதியை அண்டிய பல ஏக்கர் வயல் நிலங்களும் நீரில் மூழ்கின. தற்போது நிலத்தை பதப்படுத்தி நெற் செய்கைக்காக விதைத்து ஓரிரு நாட்களின் பின்பே கனமழையால் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால், மீண்டும் விதைக்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும், கந்தளாய் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளன. (எ)

# பயங்கரவாத தடுப்புச்சட்டம் உடனே நீக்கப்பட வேண்டும்

### ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் கோரிக்கை



கொழும்பு, மே 03

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடன் இரத்து செய்யப்பட்டு, சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமை தரநிலைகளுடன் முழுமையாக ஒத்துச்செல்லும் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினருமான நிஸாம் காரியப்பரை நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போதே நிஸாம் காரியப்பர் பல விடயங்களை ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

"இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் கட்டத்தில், குறிப்பாக அமெரிக்காவின் எதிர்பாராத வரி விதிப்புகளின் மத்தியில், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை வழங்கப்படுவது மிக அவசியமானது என்பதை எமது கட்சி முழுமையாக ஏற்றுக் கொள்கிறது.

இருப்பினும் அரசாங்கம் சில விடயங்களில் நடந்து கொள்ளும் விதம் கவலைக்குரியதாக உள்ளது.

புதிய சட்டம் அமுலுக்கு வரும் வரை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பயன்படுத்தப்படக் கூடாது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு மாத்திரம் ஒரு விதிவிலக்கு இருக்கலாம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது கருத்து சுதந்திரத்தை அடக்குவதற்காகப் பயன்படுத்துவதை கடுமையாகக் கண்டிக்கிறோம். உதாரணமாக, பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் கொடுமைகளை எதிர்த்து ஸ்ரிக்கர் ஒட்டியதற்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை புயன்படுத்தி முஸ்லிம் இளைஞனை கைது செய்து, தடுத்து வைத்ததை ஏற்க முடியாது. அதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். இதற்காக உரிய இளைஞனிடம் அரசாங்கம் மன்னிப்புக் கோர வேண்டும்.

அத்துடன் மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் உடனடியாக செய்யப்பட வேண்டும்.

பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு ஏற்ப அங்கு கட்சி தலைமைக்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்தக் கட்சியின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் உண்மையாகவே எந்தக் கட்சியை சேர்ந்தவர்களோ அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற குழுவின் தலைவராக சபாநாயகர் ஏற்க மறுக்கிறார். இது விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுக்க வேண்டும்"- என்றார். (எ)

## திருகோணமலை மாநகர சபையை தமிழரசு கைப்பற்றி ஆட்சியமைக்கும்

திருகோணமலை, மே 03

தமிழ் மக்களுக்காக எப்போதும் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்ற கட்சி தமிழ் அரசுக் கட்சி என்பதை யாரும் மறந்து விட முடியாது. இக் கட்சியை எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அமோக வெற்றியடையச் செய்ய வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களின் கைகளிலே உள்ளது என திருகோணமலை நகர சபையின் முன்னாள் தவிசாளரும் திருகோணமலை மாநகர சபையின் சிவபுரி வட்டார வேட்பாளருமான க. செல்வராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை திருகோணமலை சிவபுரியில் தனது ஆதரவாளர்களைச் சந்தித்து அவர்கள் முன் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் அரசுக்கட்சியானது ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்று வரைக்கும் மக்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. தேர்தலுக்காக மட்டும் வாக்குச் சேகரிப்பவர்கள் தமிழ் அரசுக் கட்சியினர் அல்லர். உரிமையுடன் கூடிய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செயல்படும் கட்சி தமிழ் அரசுக்கட்சி என்பதை எமது மக்கள் நன்கு அறிந்தவர்கள்.

வடக்கு - கிழக்கின் தமிழர் தலைநகர் திருகோணமலையில் மாநகர சபையை தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றி ஆட்சி அமைக்க தமிழ் மக்கள் ஆணையை வழங்குவார்கள்.- என்றார். (எ-04)

## வயலுக்கு சென்ற விவசாயி யானை தாக்கி உயிரிழப்பு!

வவுணதீவு, மே 03

மட்டக்களப்பு, வவுணதீவு பாலைக்காடு வயல் பிரதேசத்தில் வேளாண்மைக்கு நீர் பாய்ச்ச சென்ற விவசாயி ஒருவர் யானை தாக்கி உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

நாவற்காடு மஞ்சுகட்மைச் சேர்ந்த 70 வயதுடைய வைரமுத்து மகாலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த விவசாயி வழமை போல வேளாண்மைக்கு நீர் பாய்ச்சுவதற்காக சம்பவதினம் இரவு சென்றவர் காலையாகியும் வீடு திரும்பாத நிலையில் உறவினர்கள் அவரை தேடிச் சென்ற போது அவர் யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் கிடப்பதை கண்டு பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். (எ)

## மின் வேலியை சுத்திகரித்த இருவர் மின்சாரம் தாக்கி பலி

### திருகோணமலையில் சம்பவம்

திருகோணமலை, மே 03

திருகோணமலை - ஈச்சிலம்பற்று, சூரியநகரில் வயல்வெளியில் யானைத் தடுப்பு மின் வேலியை சுத்திகரித்த போது மின்சாரம் தாக்கியதில் இருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

29 மற்றும் 47 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## "வரலாற்றில் என்றுமில்லாதவாறு அரசாங்கத்தால் சம்பளம் அதிகரிப்பு"

கல்முனை, மே 03

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு வரலாற்றில் என்றுமில்லாதவாறு சம்பள அதிகரிப்பை வழங்கியிருப்பதாகவும் அதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு நன்றியை தெரிவிப்பதாக இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

தொழில் ரீதியாக தகுதி வாய்ந்த இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம் மேதினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்திப்பு, கல்முனை மயோன் பிளாஸா மண்டபத்தில் அதன் தலைவர் ஏ.எம்.நஸீர் தலைமையில் நடைபெற்றது.

இதில், சங்கத்தின் பொதுச் செயலாளர் எம். ஹூஸைன் முபாறக், உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் சார்பில் 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ- 01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாக். பாதுகாப்பு ஆலோசகராக ஐ. எஸ். ஐ. தலைவர் நியமனம்!



இஸ்லாமாபாத், மே 03

பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக லெப்டினட் ஜெனரல் முகம்மது அசிம் மாலிக்கை அந்த நாட்டு அரசு நியமித்துள்ளது.

அதே வேளை யில் அவர் ஐ. எஸ். ஐ. தலை வராகவும் தொடர்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹஸ்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்ட நிலையில் இந்தியாவின் சாத்தியமான எதிர்வினை குறித்த கவலைகளுக்கு மத்தியில் இவரது நியமனம் நிகழ்ந்துள்ளது. பாகிஸ்தான் அமைச்சரவை வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, முகம்மது அசிம் மாலிக்கிடம் தேசிய பாதுகாப்பு ஆலோசனை பொறுப்பு முறையாக வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், "லெப்டினட் ஜெனரல் முகம்மது அசிம் மாலிக் தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் பொறுப்பை கூடுதலாக உடனடியாக வகிப்பார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையை நிபுணர்களின் கருத்துக்களை மேற்கோள் காட்டி, தனது புதிய பதவியின் மூலம், தேசிய பாதுகாப்பு கொள்கைகளை வடிவமைப்பதில் அசிம் மாலிக் முக்கிய பங்கு வகிப்பார் என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிபுணர்களின் கருத்துக்களின் படி, ஐ.எஸ்.ஐ. தலைவர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பாத்திரங்களை இணைப்பது இராணுவ புலனாய்வுத் துறை மற்றும் தேசிய பாதுகாப்பு கொள்கை உருவாக்கத்தில் ஒருங்கிணைப்பை உருவாக்க முடியும்.

அசிம் மாலிக், பாகிஸ்தானின் 10ஆவது தேசிய பாதுகாப்பு ஆலோசகராவார்.

ஆனால், ஒரே நேரத்தில் நாட்டின் முக்கியமான இரண்டு பணிகளின் பொறுப்பை ஐ.எஸ்.ஐ. தலை வர் வசம் ஒப்படைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். (எ)

## "பாகிஸ்தான் பாதுகாப்புக்காக எந்த எல்லைக்கும் செல்வோம்"

இஸ்லாமாபாத், மே 03

**நாட்டின் இறையாண்மை மற்றும் பாதுகாப்புக்காக நாங்கள் எந்த எல்லைக்கும் செல்வோம் என்று பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் ஜெனரல் அகமது ஷெரீப் சவுத்ரி கூறியுள்ளார்.**

காஷ்மீரில் உள்ள பஹல்காம் சுற்றுலாத் தலத்தில் கடந்த 22ஆம் திகதி பயங்க ரவாதிகள் நடத்திய தாக்குத லில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் பலியாகினர்.

இந்த நிலையில் போர் எங்கே?, எப்போது தொடங்குவது என நீங்கள் (இந்தியா) முடிவு செய்யுங்கள், இறுதி முடிவை நாங்கள் (பாகிஸ்தான்) சொல்கிறோம்" என பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

"இந்தியா ஏதேனும் தாக்குதலை நடத்தினால், அதற்கு வலுவான பதிலடி கொடுக்கப்படும். தரைவழி, வான்வழி மற்றும் கடல்வழி என மூன்று முனைகளிலும் பதிலடி கொடுக்க பாகிஸ்தானின் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை முழுமையாக தயாராகவுள்ளது. பாகிஸ்தானின் இறையாண்மை மற்றும் பாதுகாப்புக்காக நாங்கள் எந்த எல்லைக்கும் செல்வோம். எதிர்த் தாக்குதலுக்கு நாங்கள் தயாராகவுள்ளோம். ஆயுதப் படைகள் விழிப்புடன் செயல்பட்டு வருகின்றன.

பஹல்காம் தாக்குதலுக்குப் பின்னால் பாகிஸ்தான் இருப்பதாக இந்தியா எப்படி ஒரு சில நிமிடங்களில் முடிவு செய்தது? தாக்குதல் நடந்த இடம் எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டிலிருந்து சுமார் 230 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இவ்வளவு கடினமான பாதை வழியாக யாராவது 10 நிமிடங்களில் அங்கு எப்படி அடைய முடியும்?"உள்நாட்டு அரசியல் ஆதாயங்களுக்காக, குறிப்பாக தேர்தலுக்கு முஸ்லிம்களுக்கு எதிரான சூழலை உருவாக்க, பயங்கரவாதம் தொடர்பான சம்பவங்களை இந்திய அரசாங்கம் ஆயுதமாகக் பயன்படுத்துகிறது.

இந்திய சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தானியர்கள் சுட்டுக்கொல்லப்படுவதாக நம்பகமான தகவல்கள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தான் ஒருபோதும் ஆக்கிரமிப்பைத் தொடங்காது. ஆனால், தூண்டப்பட்டால், நாங்கள் முழு பலத்துடன் பதிலடி கொடுப்போம்"- என்றார். (எ)

## அதிக வயதான பெண் மரணம்!



பிரேசிலியா, மே 03


உலகின் அதிக வயதான பெண் இனாஹ் கனாபாரோ தனது 116 வயதில் காலமானார்.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த இனாஹ் கனாபாரோ லுகாஸ் என்பவர் கடந்த 1908ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிறந்தார். 1934ஆம் ஆண்டு தனது 26 வயதில் கன்னியாஸ்திரியாக துறவு பூண்டு வாழ்ந்து வந்த இனாஹ் கனாபாரோ தனது 116 வயதில் காலமானார்.

கடந்த 30 ஆம் திகதி இனாஹ் கனாபாரோ உடல் நலக்குறைவு காரணமாக காலமானார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர். (எ)

## ஜெருசலேம் அருகே பயங்கர காட்டுத்தீ

இஸ்ரேலில் தேசிய அவசர நிலை



ஜெருசலேம், மே 03

ஜெருசலேம் அருகே பயங்கர காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது.

இதனால், இஸ்ரே லில் தேசிய அவசர நிலை பிரகடனப்படுத் தப்பட்டுள் ளது.

கடும் வெப்பம் மற்றும் வறட்சி காரணமாக தீ வேகமாக பரவி வருகிறது. காட்டுத்தீ காரணமாக பல கிராமங்கள் அபாயத்தில் உள்ளன.

ஏராளமான தீய ணைப்பு விமானங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பணியா ளர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தத் தீ விபத்தில் சிக்கிய 12 பேருக்கு காயம் ஏற்பட்டது. பல்லாயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலில் 10 ஆண்டுகளில் மிக மோசமான தீ விபத்தாக இது கருதப்படுகிறது.

வீடுகள் மற்றும் வனப் பகுதிகள் பெரும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளன. பொதுமக்கள் முன்னெச்சரிக் கையாக இருக்க வேண்டும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ் சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

கிரீஸ், சைப்ரஸ், குரோஷியா, இத்தாலி மற்றும் பல்கேரியா உள்ளிட்ட நாடு களிடம் இஸ்ரேல் உதவி கோரியுள்ளது. (எ)

## தென்கொரிய ஜனாதிபதி திடீரென இராஜினாமா!

### அடுத்த மாதம் ஜனாதிபதி தேர்தல்

சியோல், மே 03

தென்கொரியாவின் இடைக்கால ஜனாதிபதி திடீரென இராஜினாமா செய்துள்ளார்.

தென்கொரியாவில் இராணுவ அவசர நிலையை அறிவித்த விவகாரத்தில் ஜனாதிபதி யூன் சுக்-இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் அந்த நாட்டின் பிரதமர் ஹான் டக்-சூ தற்காலிக ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில், புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் அடுத்த மாதம் (ஜூன்) 3ஆம் திகதி நடைபெறுகிறது. இதில் பழமைவாத கட்சியான தென்கொரிய மக்கள் சக்தி கட்சி சார்பில் ஹான் டக்-சூ போட்டியிடுகிறார்.

இதனால், ஜனாதிபதி பதவியை ஹான் டக்-சூ இராஜினாமா செய்துள்ளார். இதனையடுத்து துணை பிரதமர் சோய் சாங்-மோக் தற்காலிக ஜனாதிபதியாக செயல்படுவார் என ஜனாதிபதி மாளிகை அறிவித்துள்ளது. (எ)

பாதுகாப்பு காரணங்களுக்காக

## பாகிஸ்தானில் மே 31 வரை வான்வெளி மூடப்படும்!

கராச்சி, மே 03

பாதுகாப்பு காரணங்களுக்காக பாகிஸ்தானில் மே 31 ஆம் திகதி வரை கராச்சி, லாகூர் வான்வெளி மூடப்படும் என்று அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

காஷ்மீரில் உள்ள பஹல்காமில் ஏப்ரல் 22ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் சுற்றுலாப் பய ணிகள் 26 பேர் பலியாகினர். இது இந்தியா முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய வான்வெளியை பாகிஸ்தான் பயன்படுத்த முடியாத வகையில் இந்தியா மூடியுள்ளது.

இதன்படி, பாகிஸ்தானில் பதிவு செய்த அனைத்து விமானங்கள், பாகிஸ்தானிய விமான நிறுவனங்களால் இயக்கப்படும் விமானங்கள், இராணுவ விமானங்கள் உட்பட குத்தகைக்கு விடப்பட்ட அனைத்து விமானங்களும் இந்திய வான்வெளியில் பறந்து செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையானது, ஏப்ரல் 30ஆம் திகதி முதல் மே 23ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என இந்தியா வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், மே மாதத்தில் பாகிஸ்தானில் கராச்சி மற்றும் லாகூர் வான்வெளியின் குறிப்பிட்ட பகுதியை ஒரு குறிப்பிட்ட நேரம் வரை தினசரி மூட முடிவு செய்யப்பட்டுள்ளது என பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி, மே முதலாம் திகதி முதல் மே 31ஆம் திகதி வரை, அதிகாலை 04. 00 மணி முதல் காலை 08. 00 மணி வரை தினமும் கட்டுப்படுத்தப்பட்ட வான்வெளி மூடப்படும் என அதிகாரபூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால்,

வர்த்தக விமான போக்குவரத்தில் பெரிய பாதிப்பு ஏற்படாது என அந்த நாட்டு விமான போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

## விசாரணைக்கு கட்டாயம் ஒத்துழைக்க வேண்டும்!

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அறிவுறுத்தல்

வாஷிங்டன், மே 03

பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் குறித்த விசாரணைக்கு கட்டாயம் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.


கடந்த 22ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். இதையடுத்து, சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்திவைப்பு, பாகிஸ்தானியருக்கான விசா இரத்து, அட்டாரி எல்லை மூடல், பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றிய பாதுகாப்பு அதிகாரிகள் வெளியேற்றம், இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தில் முப்படை ஆலோசகர்கள் பதவியிடங்கள் இரத்து உள்ளிட்ட முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சிந்து நதி ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டதால் அதை போராக கருதுவோம் என பாகிஸ்தான் தெரிவித்தது. இதனால் இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், பஹல்காம் தாக்குதல் விவகாரத்தில் பாகிஸ்தான் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அமெரிக்கா கூறியுள்ளது. இந்தியா மேற்கொள்ளும் அனைத்து விசாரணை நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். இந்தியாவும் பாகிஸ்தானும் பதற்றங்களை குறைத்து, தெற்காசியாவில் அமைதி மற்றும் பாதுகாப்பை பேணுவதில் ஒத்துழைக்க வேண்டும்- என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி



ஜெய்ப்பூர், மே 03

ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற 50ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இதில், மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடிய ரோஹித் சர்மா, ரியான் ரிக்கல்டன் இருவரும் அரைச் சதமடித்து அசத்தினர். ரியான் ரிக்கல்டன் 61 ஓட்டங்களும், ரோஹித் சர்மா 53 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்கள் இழப்புக்கு மும்பை அணி 217 ஓட்டங்கள் எடுத்தது. 218 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் ராஜஸ்தான் அணி விளையாடியது.

இதில், தொடக்க ஆட்டக்காரர்களான வைபவ் சூர்யவன்ஷி (0) ஜெய்ஸ்வால் (13) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். கடந்த ஆட்டத்தில் குறைந்த பந்துகளை எதிர்கொண்டு சதம் அடித்து அசத்திய வைபவ் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினார். இதனால், இரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

தொடர்ந்து ஆடிய ராணா (9), பராக் (16), ஜுரெல் (11), ஹெட்மயர் (0) என சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

துபே (15), ஆர்ச்சர் (30) ஓட்டங்கள் எடுத்தனர். தீக்சனா (2), கார்த்திகேயா (2) ஆகியோரும் குறைந்த ஓட்டங்களில் வெளியேறினர். ஆகாஷ் 4 ஓட்டங்க ளுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இறுதியில் ராஜஸ்தான் அணி 16.1 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 117 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதனால், மும்பை இந்தியன்ஸ் அணி 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.(எ)

## மட்ரிட் ஓபின் றென்னிஸ் இறுதியில் சபலெங்கா



மட்ரிட், மே 03

மட்ரிட் ஓபின் றென்னிஸ் தொடரில் அரினா சபலெங்கா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

மட்ரிட் சர்வதேச றென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர். பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், பெலாரஸ் வீராங்கனை அரினா சபலெங்கா, உக்ரைன் வீராங்கனை எலினா ஸ்விடோலினா உடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அரினா சபலெங்கா, 6-3, 7-5 என்ற செட் கணக்கில் ஸ்விடோலினாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இன்று நடைபெறவுள்ள இறுதிப்போட் டியில் அரினா சபலெங்கா, அமெரிக்க வீராங்கனை கோகோ காப் உடன் மோதுகிறார். (எ)

## இரண்டாவது அணியாக ராஜஸ்தான் வெளியேற்றம்

ஜெய்ப்பூர், மே 03

நடப்பு ஐ.பி.எல். தொடரிலிருந்து 2ஆவது அணி யாக ராஜஸ்தான் றோயல்ஸ் வெளியேறியது.

18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், ஜெய்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 50ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

இதில், மும்பை 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மெகா வெற்றியை பெற்றது.

11ஆவது லீக் போட்டியில் விளையாடிய மும்பைக்கு இது 7ஆவது வெற்றியாகும். இதில் தொடர்ச்சியாக 6 ஆட்டங்களில் வென்றதும் அடங்கும். 14 புள்ளிகளுடன் மும்பை அணி புள்ளிப்பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியது.

அதே சமயம் 2008ஆம் ஆண்டு சம்பியனான ராஜஸ்தானுக்கு இது 8ஆவது தோல்வியாகும். இத்துடன் ராஜஸ்தானின் "பிளேஓப்" கனவு கலைந்தது. அந்த அணி லீக் சுற்றுடன் வெளியேறுவது இது 10ஆவது முறையாகும்.

இதன்படி நடப்பு தொடரில் சென்னையைத் தொடர்ந்து 2ஆவது அணியாக ராஜஸ்தான் அணி வெளியேறியது. (எ)

## ரோஹித் சர்மாவின் மாபெரும் சாதனை



ஜெய்ப்பூர், மே 03

ரி - 20 கிரிக்கெட் போட்டிகளில் ரோஹித் சர்மா மாபெரும் சாதனை படைத்துள்ளார்.ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 50ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் ரோஹித் சர்மா எடுத்த 53 ஓட்டங் களையும் சேர்த்து மும்பை இந்தியன்ஸ் அணிக் காக இதுவரை 6,019 ஓட்டங்கள் அடித்துள்ளார்.

இதன் மூலம் ரி- 20 கிரிக்கெட் வரலாற்றில் ஓர் அணிக்காக அதிக ஓட்டங்கள் குவித்த 2ஆவது வீரர் என்ற மாபெரும் சாதனையை ரோஹித் சர்மா படைத் துள்ளார். இந்தப் பட்டியலில் விராட் கோலி, பெங்க ளூரு அணிக்காக 8,871 ஓட்டங்கள் அடித்து முதலி டத்தில் உள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு,

1. விராட் கோலி - 8,871 ஓட்டங்கள் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு
2. ரோஹித் சர்மா - 6,019 ஓட்டங்கள் -மும்பை இந்தியன்ஸ்
3. சுரேஷ் ரெய்னா - 5,528 ரன்கள் - சென்னை சுப்பர் கிங்ஸ்
4. மகேந்திரசிங் டோனி - 5,269 ஓட்டங்கள் - சென்னை சுப்பர் கிங்ஸ். (எ)

## ஐ.பி.எல்லில் சூர்யகுமார் வித்தியாசமான சாதனை



ஜெய்ப்பூர், மே 03

ஐ. பி. எல். கிரிக்கெட் வரலாற்றில் சூர்யகுமார் யாதவ் வித்தியாசமான சாதனை படைத்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 50ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தி யன்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. இதில், மும்பை அணி 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மெகா வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தையும் சேர்த்து நடப்பு ஐ.பி.எல். தொடரில் இதுவரை 11 போட்டிகளில் விளையா டியுள்ள சூர்யகுமார் யாதவ் அனைத்து போட்டிகளிலும் 25 ஓட்டங்களுக்கு மேல் அடித்துள்ளார்.

இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் தொடர்ச்சியாக அதிக முறை 25 ஓட்டங்கள் அடித்த முதல் வீரர் என்ற வித்தியாசமான சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன்பு 2014ஆம் ஆண்டில் ராபின் உத்தப்பா கொல்கத்தா அணிக்காக 10 ஆட்டங்களில் தொடர்ந்து 25 ஓட்டங்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது.

அந்த பட்டியல் வருமாறு,

1. சூர்யகுமார் யாதவ் - 11 முறை,
2. ராபின் உத்தப்பா - 10 முறை,
3. ஸ்டீவ் சுமித், விராட் கோலி, சாய் சுதர்சன் - 9 முறை (எ)

## ராஜஸ்தான் அணியின் சந்தீப் சர்மா விலகல்



ஜெய்ப்பூர், மே 03

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ.பி.எல். தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. கடந்த மாதம் 22ஆம் திகதி தொடங்கிய இந்தத் தொடரில் இதுவரை 50 லீக் ஆட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தானை வீழ்த்தி மும்பை அபார வெற்றி பெற்றது.

இதனையும் சேர்த்து நடப்பு சீசனில் இதுவரை 11 போட்டிகளில் விளையாடியுள்ள முன்னாள் சம்பியன் ராஜஸ்தான் றோயல்ஸ் வெறும் 3 போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. மீதமுள்ள 3 போட்டிக ளில் வெற்றி பெற்றாலும் ராஜஸ்தானால் வெறும் 12 புள்ளிகள் மட்டுமே பெற முடியும்.

இந்த நிலையில் ராஜஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான சந்தீப் சர்மா விரலில் ஏற் பட்ட காயம் காரணமாக எஞ்சிய தொடரில் இருந்து விலகியுள்ளார். நடப்பு சீசனில் 10 போட்டிகளில் விளையாடிய சந்தீப் சர்மா 9 விக்கெட்கள் கைப்பற்றி யுள்ளார். (எ)

## இகா ஸ்வியாடெக் அதிர்ச்சி தோல்வி



மட்ரிட், மே 03

மட்ரிட் ஓபின் றென்னிஸ் தொடரில் இகா ஸ்வியாடெக் அதிர்ச்சி தோல்வியடைந்துள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மட்ரிட் ஓபின் றென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் போலந்தின் முன்னணி வீராங்கனையான இகா ஸ்வியாடெக், அமெரிக்க வீராங்கனையான கோகோ காப் உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் இகா ஸ்வியாடெக் 1-6,1-6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தார். இதனால் கோகோ காப் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

கொள்ளப்படும் பொருளாதார ஒப்பந்தங்கள் எம்மைப் போன்ற மிகச் சிறிய நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத் தாது. எமது வீழ்ச்சி எந்த வகையிலும் அந்த நாட்டையும் பாதிக்காது.

இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கை ஒரு கடலில் நெத்தலி மீனைப் போன்றது. எனவே இந்தியா - பாகிஸ் தான் மோதல் ஏற்பட்டால் அது எமது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தைச் செலுத்தாது.

காரணம் இப்போதும் இலங்கை செல்வந்த நாடல்ல. மக்கள் மூன்று வேளை உணவை உண்பதற்குக்கூட சிரமத்தையே எதிர்கொள்கின்றனர். இது வரலாற்று ரீதியாக எமது நாட்டில் காணப்படும் பிரச்னையாகும்.

இந்த நிலைமையிலிருந்து இலங்கை மீட்சியடைந்தால் சிறப்பு. ஆனால் அதற் கான எந்த சமிக்ஞையும் இதுவரை யில் தென்படவில்லை. இலங்கை மக்கள் இன் னும் அனுபவிப்பதற்கு என்ன துயரம் இருக்கிறது? அனைத்தையும் எமது மக்கள் பார்த்து விட்டனர். எந்த நாட்டு டன் எந்த ஒப்பந் தம் கையெழுத்திடப் பட்டாலும் இலங்கையின் இறை யாண்மை பாதுகாக்கப் படவேண்டும்.

இந்தியா என்பது உலகிலுள்ள மிகப் பெரிய நாடுகளில் நான்காவது இடத்தி லுள்ள நாடாகும். எனவே அந்த நாடு வளர்ச்சியடைவதற்கு இலங்கை போன்ற மிகச் சிறிய நாடுகளின் அரசியலில் தலை யிட வேண்டியேற் படும் என்று நான் எண்ணவில்லை. அவர்களுக்கு அதற்கான தேவைப்பாடும் இல்லை - என்றார். (அ)

## இந்தியா...

மீட்சிக்கு ஆதரவளித்த இந்தியா மீதான பகையுணர்வு இலங்கையின் சர்வதேச உறவுகளை நிச்சயமாக ஆபத்தில் ஆழ்த் தும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துக் கோரள தெரிவித்துள்ளார்.

நேற்று விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

அந்த அறிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் எதிரொலித்த இந்திய எதிர்ப்பு உணர்வையும் ஐக்கிய தேசியக் கட்சி கண்டிக்கிறது.

நமது பொருளாதார நெருக்கடியின் போது இலங்கை மக்களுக்கு ஆதரவாக நின்று நமது பொருளாதார மீட்சிக்கு ஆதரவளித்தது இந்திய அரசுதான்.

ஆளும் கட்சியின் மே தினக் கூட்டத் தின்போது இந்திய அரசாங்கத்தின் மீது தேவையற்ற தாக்குதல் நடத்தப்படுவது இலங்கையின் சர்வதேச உறவுகளை நிச்சயமாக ஆபத்தில் ஆழ்த்தும்-என் றுள்ளது. (அ)

## தேசிய...

தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த இரு தசாப்தங்களாக தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு இந்தப் பகுதியில் ஆற்றிய பணிகளுக்கு நன்றிக் கடன் தெரிவிக்கும் தேர்தலாக இந்த தேர்தலைப் பார்ப்பார்கள். தேசிய மக்கள் சக்தியினர் மக்களை ஏமாற்றுகிறார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அதிகளவிலான வாக்குகளை வழங்கி னார்கள். அதேபோல் கடந்த பாராளு மன்ற தேர்தலில் வடக்கு - கிழக்கு பகுதி மக்களும், தென்பகுதி மக்களும் அதிக வாக்குகளை வழங்கி னார்கள்.

ஆனால், கடந்த 6 மாத காலப்பகு தியில் அவர்களது செயற்பாடுகள் சொன்னதற்கு நேர்மாறாக இருக்கின்றன. இந்த தேர்தலில் பெரிய பின்னடைவை அவர்கள் சந்திப்பார்கள்.

நாம் பாராளுமன்ற தேர்தலை விட இம்முறை அதிக வாக்குகளைப் பெறு வோம். கடந்த முறை வன்னியில் நான்கு சபைகளைக் கைப்பற்றி ஆட்சி அமைத் தோம். இம்முறை அதிக சபைகளை கைப்பற்றுவோம் - என்றார். (அ)

## ராஜபக்ஷக்களின்...

நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத் தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன ஒற்றுமையை ஏற்படுத்தினால் தான் இந்நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். எனவேதான் இது விடயத்துக்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் வழங்கி செயற்பட்டு வருகின்றோம்.

இந்நிலையில் வாக்கு அரசியலுக்காக மக்களை பிரித்தாளும் அரசியலை ராஜ பக்ச அணி தெற்கில் முன்னெடுத்து வருகின்றது. கடந்த காலங்களில் மக்கள் பாடம் புகட்டியும் அவர்கள் திருந்துவ தாக இல்லை.

அதேபோல வடக்கிலுள்ள சிலரும் ராஜபக்ஷக்களின் சகோதரர்களாக மாறி மக்களை பிரித்தாளும் பிரசாரத்தை செய்கின்றனர். வடக்கு, கிழக்கு பிர தேசங்களுக்காக எமது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட் டங்கள் பல இருக்க, எதுவுமே நடக்க வில்லை என்ற தொனியில் பிரசாரம் செய்கின்றனர்.

ஆனால் வடக்கிலும், தெற்கிலும் இனவாத அரசியலுக்கு மக்கள் இனியும் இடமளிக்கமாட்டார்கள் என்பது உறுதி. அதற்கான சிறந்த செய்தியை மே 6 ஆம் திகதியும் வழங்க வேண்டும். வடக்கில் இருந்து இந்த செய்தி தெளி வாகச் செல்ல வேண்டும்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் இதுவரை காலமும் தீர்க்கப்படாத தமிழ் மக்களின் பிரச்னை களுக்கு நிச்சயம் தீர்வு காணப்படும். ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோர் இந்த விடயம் தொடர்பில் கூடிய அக் கறையுடன் செயற்பட்டு வருகின்றனர் - என்றார். (அ)

## நல்லை...

இடம்பெற்றன.

அதனை தொடர்ந்து அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டு திருவுடல் ஊர்வலமாக செம்மணி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக கிரியைகள் இடம்பெற்றது.

நல்லை ஆதீனத்தின் குரு முதல்வரா கச் செயற்பட்ட சுவாமிகள் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையிலும் மக்களுக்காக பல சேவைகளை புரிந் தமை குறிப்பிடத்தக்கது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் பூரணமடைந்த செய்தி சைவமக்கள் அனைவரையும் துய ரத்தில் ஆழ்த்தியுள்ளதாக சைவசமய அமைப்புக்கள் தெரிவித்துள்ளது. (அ)

## வடக்கில்...

வர்த்தமானியில் மேற்படி காணிகள் மூன்று மாதத்துக்குள் உரிமை கோரப் படாதவிடத்து அரச காணியாக அபக ரிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருந் தது.

யாழ். மாவட்டத்தில் 3669 ஏக்கர் காணி சுபளீகரம் செய்யப்பட உள்ளதா கவும் இது வடமராட்சி கிழக்கு மருதங் கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்குள் அடங்குவதனால் மக்களுக்கு சட்ட ஆலோசனை வழங்குவதையும் எதிர்மனு விண்ணப்பம் முழுமைப்படுத்தும் வேலைத்திட்டத்தையும் சட்டத்தரணி கள் குழாம் முன்னெடுத்திருந்தது.

இதில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கேச வன் சயந்தன் உள்ளிட்ட பத்து வரை யான சட்டத்தரணிகள் கலந்துகொண்டு மக்களுக்கான ஆலோசனைகளை வழங் கினர்.

இந்த நிகழ்வு வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகத்துக்குட் பட்ட வெற்றிலைக்கேணியில் இடம் பெற்றது.

இந்த ஏற்பாடுகளை மாகாணன சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன் முன் னெடுத்திருந்தார். (அ-அ)

# தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களியுங்கள்!

## வவுனியாவில் துண்டுப்பிரசுங்கள் விநியோகம்

வவுனியா, மே. 03

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொள்கைப்பற்றுள்ள தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு வக்களிக்குமாறு கோரி, வவுனியா நகரில் துண்டுப்பிர சுரங்கள் விநியோகிக்கப்பட்டன. தமிழ்த் தேசிய செயற்பாட்டுக் குழுமத்தால் குறித்த விழிப்புணர்வு செயற்பாடு இன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த தமிழ்த் தேசிய செயற்பாட்டுக் குழுமத்தி னர், கொள்கைப்பற்றாளர்கள் உள்ள தமிழ் தேசிய கட்சிகளுக்கு வாக்களிப் போம் என தெரிவித்தனர்.(அ)

# ஜனாதிபதி அநுர இன்றிரவு வியட்நாம் பயணமாகிறார்!

கொழும்பு, மே 03

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் இன் அழைப்பின் பேரில், ஜனா திபதி அநுர குமார திஸநாயக்க நாளை முதல் செவ்வாய்க்கிழமை வரை வியட் நாமுக்கு அரச முறை பயணம் மேற் கொள்ளவுள்ளார். இதற்காக, ஜனாதிபதி இன்றிரவு நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 55ஆவது ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில் இடம்பெறும் ஜனாதிபதியின் இந்தப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான உறவுகளை மேலும் உறுதிப்படுத்தும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த பயணத்தில் ஜனாதிபதி, வியட் நாம் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார். கம்யூனிஷ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் உட்பட சிரேஷ்ட அதிகாரிகள் பலரையும் சந்திக்கவுள்ளார்.

மேலும், ஹோ சி மிங் நகரில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் வெசாக் தின கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, அதன்போது சிறப்புரை ஒன்றையும் நிகழ்த்தவுள்ளார். இந்தப் பயணத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திட வும் வர்த்தக சமூகத்தினரை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்துவார் என் றும் கூறப்படுகிறது.

வெளிநாட்லுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் குழுவும் இந் தப் பயணத்தில் இடம்பெற்றுள்ளனர்.

## வடக்கு - கிழக்கில்...

அபிவிருத்தி, நிர்மாணத் துறை மற்றும் வீடமைப்பு அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைத் திட்டத் தின் நன்கொடையாளர் ஒருங்கிணைப்பு மற்றும் பாராட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரத மர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மனிதாபிமான கண்ணிவெடி அகற் றும் பணியில் பங்காளிகளாக உள்ள அனைவருக்கும் எனது நன்றியை தெரி விக்கிறேன்.

மோதல்களுக்குப் பின்னர் எழுந்த ஒரு தேவையாக இருந்தாலும், கண்ணி வெடி அகற்றல் என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும். இந்த செயன் முறை பௌதீக ஆபத்துகளை அகற்று வது மட்டுமல்ல, மக்களின் கண்ணியம், வாழ்வாதாரம் மற்றும் அமைதியான எதிர்காலத்திற்கான வாக்குறுதியை மீட்டெடுப்பது பற்றியதும் ஆகும்.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படு வது, பிள்ளைகள் பாதுகாப்பாக விளை யாடுவது, விவசாயிகள் தங்கள் நிலங் களுக்கு அச்சமின்றித் திரும்புவது, மக்க ளின் வாழ்க்கை நிலைமைகளை மீண்டும் கட்டியெழுப்புவது போன்ற விடயங்க ளுக்கு கண்ணிவெடிகளை அகற்றுவது மிகவும் முக்கியம்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி தொலை நோக்குப் பார்வைக்கு ஏற்ப, அனைவருக் கும் சமமான வாய்ப்புகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. கல்வி, சுகாதாரம், தகவல் முகா மைத்துவம், சமூக நலன்பேணல் மற்றும் சுற்றாடல் நிலைத்தன்மைக்காக இந்த செயன்முறையை விரைவுபடுத்துவது மிகவும் முக்கியம்.

இதற்கு முன்னர் அபிவிருத்தி நடவடிக்கைகள் மனித நடவடிக்கை களில் இருந்து விலக்கப்பட்டிருந்த இந்தப் பகுதிகள் செழிப்படையவும், எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்க வும், விவசாயத்தையும் சுதேச பொருளா தாரத்தையும் மேம்படுத்தவும், சூழல் நிலைத்தன்மையை உருவாக்கவும் கண்ணிவெடிகள் அகற்றல் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

வடக்கு மற்றும் கிழக்கில் சுமார் 23 சதுர கிலோமீற்றர் நிலம் இன்னும் கண்ணிவெடிகள் காரணமாகப் பயன் படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, கண்ணிவெடிகள் உள்ள பகுதிகளை பொதுமக்கள் விரைவில் பயன்படுத்தக்கூடியதாக மாற்றவேண் டும். 2028 ஜூன் முதலாம் திகதிக்கு முன்னர் கண்ணிவெடிகளை அகற்றுவ தற்கான ஒப்பந்தத்தின் பிரிவு 5 இன் கீழ் உள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவ தற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

ஒவ்வொரு கண்ணிவெடியையும் அகற்றுவது மக்களின் நன்மைக்கும் நாட்டின் எதிர்காலத்திற்கும் மிகவும் முக்கியமானது என்றும், எனவே, சர்வ தேச சமூகத்திடமிருந்து தொடர்ந்து ஆத ரவை எதிர்பார்க்கிறோம் - என்றார். (அ)

## இறுதிப்...

தேசிய இரத்தினக் கற்கள் மற்றும் நகைகள் அதிகார சபையால் இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்படும்.

அடையாளம் மற்றும் உரிமைச் சான்று கிடைத்தவுடன் பொருட்கள் அவற்றின் உரிமையாளர்களிடம் திருப் பிக் கொடுக்கப்படும் என்று இலங்கை இராணுவம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## தேர்தல்...

பிரசார நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறும் இறுதி அர சியல் பிரசாரக் கூட்டங்களின் வீடியோ காட்சிகள் மற்றும் விவரங்களை நாளை ஒவ்வொரு தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசையில் ஒரு பிர தான செய்தி அறிக்கையில் மாத்திரம் பிரசாரம் செய்ய முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

நாளை வெளியாகின்ற செய்தித் தாள்களில் அக்கூட்டங்களின் புகைப் படங்களையும் அறிக்கைகளையும் வெளியிட முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

நாளை அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளில் அன்றைய நாளிதழ் களின் தலைப்புச் செய்திகளை வெளி யிடும்போது நாளிதழ்களின் தலைப்புச் செய்தியை மட்டுமே வெளியிடவேண் டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பல்கலை. கல்விசார் ஊழியர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு

கொழும்பு, மே 03

பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மட்டத்தில் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக பிரதி அமைச்சர் மதுர செனெவிரத்ன தெரிவித்தார்.

சுமார் 2 ஆயிரம் கல்விசார் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழிற்சங்க சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னுரிமையின் அடிப்படையில் குறித்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு வாக்களிப்பது அவசியமானது

### காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்கள் கூட்டாக வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 03

**எமது மக்களுக்காக இதுவரை ஏதோவொரு வழியில் உழைத்த எமது தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கின்ற கட்சிகளுக்கு வாக்களிப்பது அவசியம் என்று வடக்கு - கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.**

நேற்று வெள்ளிக்கிழமை யாழ். ஊடக அமையத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்களின் பிரதிநிதிகள் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும், உள்ளூராட்சி என்பது எமக்கான அதிகாரங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பு. இதை எமது தமிழ் தேசியத்தில் இருக்கும் ஒரு தரப்பினரே ஆளுகை செய்ய வேண்டும். தமிழ் தேசியத்தின் வலிமையை இம்முறை நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபை தேர்தலில் தமிழ் மக்கள் காண்பிக்க வேண்டும்.

தென்னிலங்கையின் கட்சிகளின் பிரதிநிதிகள், அவர்களால் இறக்கப்பட்டுள்ள சுயேச்சைக் குழுக்கள் போன்றவை எம்மை மீண்டும் ஏமாற்றவே முயல்கின்றன. இவர்களை இனியும் நம்ப முடியாது. இதைவிட வடக்கில் தென்னிலங்கைக் கட்சிகளின் நலன்களை நிலைநாட்ட எமது சிலர் அக்கட்சிகளின் சார்பில் போட்டியிடும் எமது இருப்பை இல்லாதொழிக்க முயல்வது வெட்கக்கேடான விடயமாகும்.

எமது மக்களுக்காக இதுவரை ஏதோவொரு வழியில் உழைத்த எமது தமிழ் தேசியப் பரப்பில் இருக்கின்ற கட்சிகளுக்கு வாக்களித்து, எமது உள்ளூராட்சி சபைகளை கரங்களுக்கு கொடுப்பது அவசியம் - என்று கூறினர். (ஐ)

# வன்முறையற்ற தேர்தலுக்கான கலாசாரத்தை உருவாக்குவோம்!

### கபே அமைப்பு அழைப்பு

திருகோணமலை, மே 03

தேர்தல் நிலவரத்தை பார்க்கிறபோது, கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகளவு முன்னேற்றம் காணப்படுகிறது. வன்முறையற்ற தேர்தல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் கிண்ணியாவில் நடந்த தேர்தல் விழிப்புணர்வு பிரசாரத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில், தேர்தல் காலங்களில் ஏற்படும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டிய முறை தொடர்பில் தெளிவூட்டப்பட்டன.

இங்கு கருத்துரைத்த கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீன், நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்ததில் இருந்து கபே அமைப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அந்த அடிப்படையில், தேர்தலுக்கு முன்னர், பின்னர், தேர்தல் அன்று என மூன்று தினங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மாவட்ட மட்டத்தில் 26 இணைப்பாளர்களும் தேசிய மட்டத்தில் 105 கண்காணிப்பாளர்களும் தேர்தலுக்கான க்ண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தலுக்கு முன் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகின்றபோது, அதிகளவு முன்னேற்றம் காணப்படுகிறது. 2011, 2018 உள்ளூராட்சி மன்ற தேர்தலை விடவும் வன்முறை சம்பவங்கள் குறைந்தளவில் பதிவாகியுள்ளன. வன்முறையற்ற தேர்தல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் - என்றார்.

## பொலிஸ் காவலிலிருந்த இளைஞர் உயிரிழப்பு!

கொழும்பு, மே 03

போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான இளைஞர் பொலிஸ் காவலில் இருந்தபோது சுகவீனமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும்போது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி - கொஸ்கொடையை சேர்ந்த 27 வயதான தரிது சிறிவர்தன டி சொய்சா என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞர் நேற்று முன்தினம் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார். அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், திடீரென சுகவீனமடைந்தார். மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மரணம் தொடர்பில் முறையான விசாரணைகள் நடைபெறுகின்றன என்று கொஸ்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், தனது மகன் கைது செய்யப்பட்டபோது கொஸ்கொடை பொலிஸ் அதிகாரிகள் அவரை கடுமையாக தாக்கினர் - என்று உயிரிழந்த இளைஞரின் தந்தை கூறியுள்ளார். (ஐ)

## தமிழின அழிப்பை மறுக்கவே தேர்தலில் வெல்ல அரசு சதி!

### சாடுகிறார் சிறீதரன் எம். பி.



கிளிநொச்சி, மே 03

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி சபைகளை அதிகளவில் கைப்பற்றி தமிழினத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட அழிப்பை ஜனநாயக தீர்ப்பின் மூலம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மறுக்கவுள்ளது. இதனால், தேர்தலில் வெல்வதற்கு பல சதிச்செயல்களில் அது ஈடுபட்டுள்ளது - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பூநகரி பிரதேச சபைக்கான தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வடக்கு - கிழக்கின் உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதன் மூலம் தமிழ் மக்கள் தங்களை அங்கீகரித்திருக்கிறார்கள். அவர்கள்மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலை அல்ல - மனித குலத்துக்கு எதிரான போர் குற்றங்களில் அரச, இராணுவ நிருவாகம் ஈடுபடவில்லை என்று கூறி அதனை நிரூபிப்பதற்கான ஜனநாயக தீர்ப்பாக உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலைப் பயன்படுத்த எல்லா வகை பிரயத்தனங்களையும் - மோசடிகளையும் அரசாங்கம் மேற்கொள்கிறது - என்றும் தெரிவித்தார். (ஐ)

## தேர்தலில் வாக்களிக்க விடுமுறை அளியுங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, மே 03

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு வாக்களிப்பதற்காக தேர்தல் சட்ட விதிகளின்படி விடுமுறை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவனத் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

மேலும், பல்கலைக்கழகங்கள், மேலதிக வகுப்புகள், ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள், மாணவர்களுக்கு விடுமுறை வழங்குவது அவசியமானது. அரச அதிகாரிகளுக்கு, வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல வேண்டிய தூரத்தைப் பொறுத்து, நிறுவனத் தலைவர் தீர்மானிக்கும் போதுமான காலஅவகாசத்துடன், குறைந்தபட்சம் 2 மணி நேர விடுமுறை வழங்குவது அவசியம்.

தனியார் துறைக்கு விடுமுறை வழங்குவதற்காகவும் தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. இதன்படி, வாக்களிப்பு நிலையத்துக்கு 40 கிலோமீற்றர் அல்லது அதற்கும் குறைவாக இருந்தால் அரை நாள், 40 முதல் 100 கிலோமீற்றர் வரை இருந்தால் ஒரு நாள், 100 முதல் 150 கிலோமீற்றர் வரை இருந்தால் ஒன்றரை நாள், 150 கிலோமீற்றருக்கு மேல் இருந்தால் இரண்டு நாட்கள் விடுமுறை வழங்கப்பட வேண்டும். எனினும், சில வாக்காளர்களுக்கு வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல வேண்டிய தூரத்தைப் பொறுத்து இதற்கு மேல் கூடுதல் நாட்கள் விடுமுறை தேவைப்படலாம்.

இதற்கிடையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து பிரசார நடவடிக்கைகளும் இன்று நள்ளிரவு முதல் முடிவுக்கு வரும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## 10,550 போதைமாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைதானார்!

கொழும்பு, மே 03

மோட்டார் சைக்கிளில் போதை மாத்திரைகளை கடத்திய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து, 10 ஆயிரத்து 550 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று விசேட அதிரடிப் படை பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை வடக்கை சேர்ந்த 26 வயது இளைஞரே இவ்வாறு கைதானார். அவரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஒருநாள் கடவுச் சீட்டு சேவை 3 நாட்களுக்கு நிறுத்தப்படும்

கொழும்பு, மே 03

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு ஒருநாள் சேவையில் கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வதற்காக 24 மணி நேரம் செயல்படும் சேவை மூன்று நாட்களுக்கு நிறுத்தப்படவுள்ளது என்று குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் புதன்கிழமை வரை கடவுச்சீட்டு விநியோகம் ஒரு நாள் சேவை நிறுத்தப்படவுள்ளது. அத்துடன், சாதாரண சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org